# மலையகத் தமிழரின் பிரஜாவுரிமைப் பிரச்சினையும் சிறுகதையாக்கமும்

எம்.எம். ஜெயசீலன்
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.
jseelanuop@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் குடியேற்றவாதத்தால் வஞ்சிக்கப்பட்ட மக்களில் ஒரு பகுதியினராகிய இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் நாடு சுதந்திர மடைவதற்கு சற்று முன்னரும் பின்னரும் மேற்கொள் ளப்பட்டன. குறிப்பாக நில அபிவிருத்திச் சட்டம் (1935), பிரஜாவுரிமைச் சட்டம் (1948), இந்திய பாகிஸ்தானிய வதிவிடச் (பிரஜாவுரிமை) சட்டம் (1949), சிறீமா - சாஸ்திரி ஒப்பந்தம் (1964), சிறீமா-இந்திரா ஒப்பந்தம் (1974) நாடற்றோர் சட்டம் (1986) போன்ற பல சட்ட ஆக்கங்கள் மற்றும் ஒப்பந்தங்களால் அச்சமூகத்தினர் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டுவந்ததை வரலாறு நெடுகிலும் காணலாம். இச்செயற்பாடுகளால் மலையகத்தமிழர் அடைந்த துயர், அது அவர்களது வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்கள், அதனால் விளைந்த மனித அவலங்கள் போன்றவற்றை மையமாகக் கொண்டு மலையகத்தைச் சார்ந்தோரும் மலையகத்தைச் சாராதோரும் பல்வேறுவிதமான படைப்பாக்கங்களை மேற்கொண்டுள்ளனர். இப்படைப்பாக்கங்களுள்ளே சிறுகதைகள் பிரஜாவுரிமைப்பறிப்பு மற்றும் அதன் உடன்விளைவான நிகழ்வுகளால் விளைந்த தனி மனித, குடும்ப அவலங்களைச் சித்திரிப்பதன் மூலம் அச்சமூக அவலங்களை எவ்வாறு பதிவு செய்துள்ளன என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. பிரஜாவுரிமைப்பறிப்பு மற்றும் அதன் உடன்விளைவான நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் சிறுகதைகளை முதன்மை ஆதாரமாகக் கொண்டுள்ள இவ்வாய்வானது விவரண மற்றும் சமூகவியல் அணுகுமுறைகளின் வழி மேற் கொள்ளப்பட்டுள்ளது. இக்கதைகளில் விரியும் காட்சிகள் யாவும் இந்தியவம்சாவளி மலையகத் தமிழர்களுக்கு மிகவும் நெருக்கமானவையாகும். அக்குழுமத்தின் ஒவ்வொரு குடும்பத்தினரும் ஏதோவொரு சந்தர்ப்பத் தில் எதிர்கொண்ட அனுபவங்களே இக்கதைகளின் கருக்களாக அமைந்துள்ளன. குறிப்பாக பன்முகப்பட்ட அக வெளிகளைக் கொண்டுள்ள தனிமனிதர்களின் வாழ்க்கையில் பிரஜாஉரிமைப்பறிப்பு மற்றும் அதன் உடன்விளைவான நிகழ்வுகள் ஏற்படுத்திய அவலங் களையும் அதிர்வுகளையும் பதிவுசெய்வதன் மூலம் ஒட்டுமொத்த இந்தியவம்சாவளி மலையகத் தமிழரினது அக மற்றும் புற வெளியில் நிகழ்ந்த அவலங்களையும் அதிர்வுகளையும் இக்கதைகள் சிறப்பாகப் பதிவு செய்து ள்ளன

**திறவுச் சொற்கள் –** மலையகம், மலையகத் தமிழர், பிரஜா வுரிமை, பெருந்தோட்டத் தொழில்துறை

## 1. ஆய்வு அறிமுகம்

பெருந்தோட்டத் தொழிற்றுறைச் சமூகத்தையும் அதன் தனித்துவமான வாழ்வியல் அம்சங்களையும் அச்சமூகத்தின் அரசியல், சமூக, பொருளாதார நிலை மைகளையும் பிரதிபலிக்கும் மலையகத் தமிழ் இலக்கியம், இலங்கைத் தமிழ் இலக்கியம் எனும் பெருந்தொகுதிக்குள் ஒரு முக்கிய கூறாக விளங்குகிறது. இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறுடன் ஒப்பிடும்போது மிகக் குறுகிய கால வரலாற்றினையே மலையகத் தமிழ் இலக்கிய வர லாறு கொண்டிருக்கின்ற போதும் அதனுடைய எழுச்சி யானது, இலங்கைத் தமிழ் இலக்கியத்திற்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த தமிழ் இலக்கியத்திற்கும் வளம் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

அப்பெருந்தோட்டத் தொழிற்றுறைச் சமூகத்தினர் தமது வரலாறு நெடுகிலும் பல்வேறு வகையான இன்னல்களுக்கு உட்பட்டுவந்துள்ளனர். அத்துயர்தோய்ந்த வாழ்க்கையின் மாறா வடுவாக இன்றும் அழுத்திக் கொண்டிருப்பது. அவர்களது பிரஜாவுரிமைப் பறிப்பும் அதன் உடன் விளைவான நிகழ்வுகளுமாகும். பிரித்தானிய ஏகாதி பத்தியத்தின் குடியேற்றவாதத்தால் வஞ்சிக்கப்பட்ட மக்களில் ஒரு பகுதியினராகிய இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களை இலங்கையிலி ருந்து வெளியேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் நாடு சுதந்திரமடைவதற்கு சற்று முன்னரும் பின்னரும் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக நில அபிவிருத்திச் சட்டம் (1935), பிரஜாவுரிமைச் சட்டம் (1948), இந்திய பாகிஸ்தானிய வதிவிட (பிரஜாவுரிமை) சட்டம் (1949),

சிறீமா சாஸ்திரி ஒப்பந்தம் (1964), சிறீமா-இந்திரா ஒப்பந்தம் (1974), நாடற்றோர் சட்டம் (1986), நாடற்றோர் சிறப்பு ஏற்பாடு (1989) போன்ற பல சட்ட ஆக்கங்கள் மற்றும் ஒப்பந்தங்களால் அச்சமூகத்தினர் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டு வந்துள்ளனர்.

பொதுவாக யுத்தம் நிர்ப்பந்தித்த அகதி வாழ்வின் புற இழப்புக்களைவிட இலங்கை-இந்திய அரசுகளால் திட்டமிடப்பட்டு, சட்ட ஆக்கங்கள் மூலம் அகதி வாழ்விற்குள் தள்ளப்பட்டவர்களின் வெளிவாரியான இழப்புக்கள் குறைவாகவே காணப்பட்டாலும் இருசாராரதும் அக இழப்புக்கள் ஒத்தவையே: உணர்ச்சி வெளிப்பாடுகளும் சமாந்தரமானவையே. இதற்கு அவர்களது இலக்கியப் பதிவுகள் தக்க சான்றுகளாக அமைகின்றன. அவ்வகையில் பிரஜாவுரிமைப்பறிப்பு மற்றும் அதன் உடன் விளைவான நிகழ்வுகளால் விளைந்த தனிமனித மற்றும் குடும்ப அவலங்களைச் சித்திரிப்பதன் மூலம் அச்சமூக அவலங்களை சிறுகதைகள் எவ்வாறு பதிவு செய்துள்ளன என்பதை ஆராய இக்கட்டுரை முனைகிறது.

**2. ஆய்வு ஆதாரங்கள்**

மலையகத் தமிழரின் பிரஜாவுரிமைப் பறிப்பு மற்றும் அதன் உடன்விளைவான நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு இதுவரை வெளிவந்துள்ள, அ.செ.முருகானந்தனின் "காளிமுத்துவின் பிரஜாஉரிமை" (1958), செந்தூரனின் "உரிமைஎங்கே?" (1960), இரா. சிவலிங்கத்தின் "முன்னவன்சொத்து" (1963), தி. ஞானசேகரனின் 'பிறந்தமண்'(1972), ரத்னசபாபதியின்"அம்மாசிஇலங்கைப் பிரஜையானான்"(1974), மொழி வரதனின் 'பிரிந்து செல்லும் ஒரு தோழன்'(1978),புன்னைவனராசனின் "அவர்கள் அகதிகள் (1980) மற்றும் இக்கரை நியாயம்"(1981), கே.ஆர். டேவிட்டின் "கௌரவமான அடிமைகள்"(1982), கோவிந்தராஜின் "குத்தகை" (1987), மாத்தளை சோமுவின் "அவர்களின் தேசம்"(1993), மு. சிவலிங்கத்தின் "பேப்பர் பிரஜை" (1963), "மதுரகீதம்" (1968) "ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டு" (1999) மற்றும் "ஒப்பாரிக்கோச்சி" (2008) ஆகிய கதைகள் இவ் வாய்விற்கான முதன்மை ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

**3. பிரஜாவுரிமைப் பிரச்சினையும் சிறுகதையாக்கமும்**

ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட சிறுகதைகள் யாவும் பிரஜாவுரிமைப்பறிப்பு மற்றும் அதன் உடன்விளைவான நிகழ்வுகள் தனிமனித வாழ்வில் ஏற்படுத்திய அவலங்களையும் அதிர்வுகளையும் வெவ்வேறு கோணங்களில் பதிவு செய்வதாக அமைந்துள்ளன. அவற்றினைப் பின்வருமாறு பாகுபடுத்தி நோக்கலாம்.

**4. இலங்கைப்பிரஜை அந்தஸ்தைப் பெற பலவாறு முயற்சித்தல்**

1948ஆம் ஆண்டு D.S. சேனாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பிரஜா உரிமைச் சட்டமானது, பெருந்தொகை மலையகத் தமிழர்களை நாடற்ற அநாதைகளாக்கியது. பின்னர் இப்பிரச்சினைக்குத் தீர்வாக மேற்கொள்ளப்பட்ட சட்ட ஆக்கங்கள் மற்றும் உடன்படிக்கைகளால் நாடிழந்த ஒரு பகுதி மலையகத் தமிழர்களுக்கு கட்டம் கட்டமாக இந்தியப் பிரஜைகள் அந்தஸ்து வழங்கத் தீர்மானிக்கப்பட்டதோடு மற்ற பகுதியினருக்கு இலங்கை அரசு, பிரஜைகள் அந்தஸ்தை வழங்குவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. இந்நிலைமையால் நாடற்ற அகதியாகியோர் தம்மை இலங்கைப் பிரஜையாகவோ இந்தியப் பிரஜையாகவோ பதிவு செய்ய முயற்சித்ததோடு, பெரும்பாலானோர் இலங்கை அரசு தமக்கிழைத்த கொடுமையினால் தாய்நாடு தம்மை வாழவைக்கும் என்ற ஆசையில் இந்தியப்பிரஜை அந்தஸ்த்திற்கு விண்ணப்பித்தனர். ஆனால், உணர்ச்சி வசப்பட்டு மேற்கொண்ட இச்செயலினால் விளைகின்ற துயரங்களைக் கேள்வியுற்றபின் அவர்களும் தம்மை இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்வதற்கு கடும் பிரயத்தனங்களை மேற்கொள்ளலாயினர்.

எடுத்துக்காட்டாக சுப்பையா நாயக்கர் என்ற தோட்டத் தொழிலாளி, இலங்கைப் பிரஜை என்ற அந்தஸ்தைப் பெற அனுபவித்த அவலங்களையும் அவமானங்களையும் உணர்வுபூர்வமாகவும் யதார்த்தபூர்வமாகவும் பதிவு செய்வதாக செந்தூரனின் **உரிமை எங்கே?** என்ற கதை அமைந்துள்ளது. பறங்கிமலைத் தோட்டத் தொழிலாளியான சுப்பையா நாயக்கருக்கு "உனக்கும் உன் குழந்தைகளுக்கும் பிரசா உரிமைத் தரப்படும். கண்டியில் வந்து பிரசா உரிமைக் கமிஷ்னர் முன்னிலையில் சத் ஶ்ரீதியம் செய்து பிரசா உரிமைச் சர்டிபிகேட்டைப் பெற்றுக் கொள்ளவும்"[1] என்று திகதியும் குறிப்பிட்டு கடிதம் கிடைத்தது. அக்கடிதத்தைப் பெற்றுக்கொள்ள சுப்பையா நாயக்கர் அனுபவித்த துயரங்களைப் பின்வருமாறு பதிவு செய்கிறார் ஆசிரியர்:

'எத்தனை ஆண்டுகள் அந்த ஒரு கடிதத்திற்காக அவர் தவியாய் தவித்தார். ஓராண்டா? ஈராண்டா? பத்தாண்டுகள் எப்படியோ ஓடி மறைந்துவிட்டன............ சுமார் பதினொரு ஆண்டுகளுக்கு முன்னர் - பிரசா உரிமைச் சட்டம் வந்த புதிதில் - தம்மையும் தம் குடும்பத்தையும் இலங்கைப் பிரஜைகளாகச் சேர்த்துக் கொள்ளுமாறு

மனுபோட்டவர்களில் அவரும் ஒருவர். மனு போட்டதும் உரிமை கிடைத்துவிட அவரென்ன இலட்சாதிபதியா? எத்தனை விசாரணைகள்? எவ்வளவு பணம் செலவு. அலைச்சல்? அப்பப்பா, அவர் தம் பிறப்புரிமையைப் பெறும் பொருட்டு பஸ்களுக்கும் கடிதம் எழுதுபவர்களுக்கும் தபால் அலுவலகத்திற்கும் கொடுத்த பணம் இன்று அவரிடம் இருந்திருந்தால் குறைந்தது ஐந்து ஏக்கர் தேயிலைத் தோட்டத்திற்காவது அவர் அதிபதியாக இருந்திருப்பார்! பாவம் இத்தனை இன்னல்களுக்கு பின்னர், ஒரு நாள் அந்தக் கடிதம் வந்தது. [2]

இவ்வாறு பல்வேறு இன்னல்களுக்குப் பிறகு எதிர்பார்த்த கடிதம் கிடைத்தும், கச்சேரிக்குச் சென்றபிறகு கடிதமானது பறங்கிமலை எட் கங்காணிக்குரியது எனக்கூறிய கமிஷ்னர் சாதாரணமாக மன்னிப்புக்கேட்டு சுப்பையா நாயக்கரை திருப்பி அனுப்பிவிடுகிறார். 'கமிஷனர் ஏதோ சாதாரணமாக மன்னிப்புக் கேட்டுவிட்டார். ஆனால், நாயக்கருக்கோ, அவரது ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு அம்பாக உள்ளத்தில் பாய்ந்தது. எண்ணிய எண்ணங்கள், கட்டிய கோட்டைகள், அத்தனையும் ஒரு நொடிப்பொழுதில் தூள்தூளாயின. தலைச்சுற்றியது. உலகமே அவரை எண்ணி நகைப்பதாக அவர் எண்ணினார். திரும்பிய பக்கமெல்லாம், ''கள்ளத்தோணி! கள்ளத்தோணி!!'' என்ற சப்தம் கேட்பதாகவே அவரது பேதை உள்ளம் எண்ணித் தடுமாறியது. ஏதேதோ பிதற்றினார். சிரித்தார், அழுதார்'' [1] என சுப்பையா நாயக்கரின் எதிர்பார்ப்பும் ஏமாற்றமும் உருக்கமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். அத்தோடு இவ் அவல நிலையே மலையகம் முழுவதும் தொடர்ந்தது என்பதைக் கதையின் ஈற்றுப்பகுதியில் வரும் 'தலதாமாளிகை நெருங்க நெருங்க நடுப்பகல் பூசையின் மணியோசை ''டாங்...! டாங்...! என்று பலமாக ஒலித்தது. ஒவ்வொரு ஒலியும் ''உரிமை எங்கே? உரிமை எங்கே?'' என்று நாயக்கரின் செவியில் மாத்திரமல்ல, மலைநாடு முழுவதுமே கேட்பது போல இருந்தது'[1] என்ற சித்திரிப்பு உணர்த்துகிறது.

பிரஜா உரிமையைப் பெறுவதற்கு அத்தாட்சி பிறப்பு பத்திரங்கள் வேண்டும் என தீர்மானிக்கப்பட்டபிறகு, பிறப்புப் பதிவிற்கான முறையான ஒழுங்கமைப்புகள் மேற்கொள்ளப்படாத வெள்ளைக்கார சூப்பிரண்டன் ஆட்சியில் பிறந்து வளர்ந்த மலையகத் தமிழர்கள் பலர் தமது பிறப்புப் பதிவினை உறுதிப்படுத்த முடியாமல் திண்டாடியதையும் மனம் நொந்து சோர்ந்து போனதையும் காளிமுத்துவின் பிரஜாஉரிமை என்ற கதையின் மூலம் கண்டுகொள்ள முடிகிறது. தமது சொந்த வியர்வையையும் இரத்தத்தையும் பாய்ச்சி சந்ததி சந்ததியாக பண்படுத்திவந்த தோட்டங்கள் இருக்கும் போதே பிறப்பு அத்தாட்சி கேட்பதால் செய்வதறியாது திணறும் காளிமுத்து என்ற தொழிலாளியின் மனப்போராட்டம் ஒட்டுமொத்த மலையகத் தமிழரின் மனப்போராட்டமாக விரிவடைவதைக் காணலாம்.

### 5. இந்தியப் பிரஜை அந்தஸ்தைப் பெற்றவர்கள் இலங்கையைவிட்டுப் புலம்பெயர விருப்பம் அற்று இருத்தல்

நாடற்ற அகதியாகி திசைதெரியாதிருந்த மலையகத் தமிழரில் பலர் ஆரம்பத்தில் தம்மை இந்தியப் பிரஜையாக பதிவு செய்வதில் ஆர்வம் மிக்கவர்களாகவே விளங்கினர். ஆனால், தம் உணர்ச்சியின் வேகம் தணிந்தபிறகு தாம் மேற்கொண்ட முட்டாள்தனமான அச்செயலுக்காக வருந்தியதோடு அவர்களது பிள்ளைகளும் அந்நிலைமையை ஆத்மார்த்தமாக வெறுத்தனர். பிறந்து வளர்ந்த மண்ணின் மீதான நெருக்கமும் முதற்கட்டங்களில் இந்தியா சென்றவர்களின் துயரவாழ்வும் அவர்களுக்கு புலம்பெயர்வதில் மனச்சிக்கல்களைத் தோற்றுவித்தது எனலாம். இந்நிலைமையால் அவர்களுக்கு இலங்கையில் வசிப்பதற்கு வழங்கப்பட்ட விசா காலம் முடிவடைந்தும் அவர்கள் நாட்டைவிட்டு புலம்பெயர மனமில்லாது தவித்தனர். ஆனால், அரசானது சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களை இந்தியாவிற்கு நாடுகடத்தியது. இந்நிகழ்வுகள் யாவற்றையும் சோக வுணர்வுடன் பல சிறுகதைகள் வெளிப்படுத்தியுள்ளன.

''இலங்கையில் சிறீமா ஆட்சி வந்தது. இந்தியாவில் லால் பகவதூர் சாஸ்த்திரி ஆட்சி வந்தது. இரண்டு நாட்டுப்பிரதம மந்திரிகளும் இந்தியத் தமிழர்களைப் பங்கு வைக்கும் ஒரு பண்டமாற்று ஒப்பந்தத்தைப் போல் ஒப்பந்தம் எழுதி, மக்களை பங்கு வைத்துக் கொண்டனர். வழி தெரியாமலும்... அனுபவித்த துயரத்தாலும் '... தாய், தகப்பன் பொறந்த நாட்டுக்கே போயி சேருவோம்..' என்ற ஆக்ரோஷத்தால், இந்தியக் குடியுரிமைக்கு மனு போட்டவர்களில் சுப்பிரமணியத்தின் தகப்பன் சிவசாமியும் ஒரு ஆளாகும். இந்தியாவுக்கு விண்ணப்பம் செய்துவிட்ட பிறகுதான் 'மடையன் மாதிரி தவறு செஞ்சுபுட்டேன் ராக்கம்மா..! என்று மனைவியின் கைகளைப் பிடித்துக் கொண்டு பிள்ளைகளுக்குத் தெரியாமல் அழுதார்" [4]

இச்சித்திரிப்பானது சிறீமா—சாஸ்த்திரி ஒப்பந்தத்தின் கொடுமையையும்வழிதெரியாமல்அனுபவித்த துயரத்தால்

ஆக்ரோஷமடைந்த பெற்றோர்கள் உணர்ச்சிவசப்பட்டு எடுத்த முடிவினையும் பின்னர் அம்முடிவினை எண்ணி வருந்துவதையும் வெளிப்படுத்துகிறது. தந்தையின் இவ்வுணர்ச்சிவசப்பட்ட முடிவினால் சுக்குரு தன் குடும்பத்துடன் பெயரளவில் தாய்நாடாக அறிந்த இந்தியாவிற்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்படுகிறான். தமக்கு முன்னர் இந்தியா சென்றவர்களின் தகவலின் படி அகதிவாழ்வின் ஒவ்வொரு அசைவிலும் ஏமாற்று, களவு, கொள்ளை, கொடூரம், நிர்க்கதி என்பவையே சூழ்ந்திருப்பதை அறிந்துகொள்கிறான். ''என் இரு கண்களிலும் கிடைக்கப்பெற்ற சுக்குருவுக்கு தங்கவேலு எழுதும் கடதாசி. நாங்கள் இப்பவும் கடவுள் கிருபையால் ஷேமமாக இருக்கோம். தம்பி இந்தியாவுக்கு வர்ற ஆசையை வுட்டுப்புடு...! நாங்க ஏமாந்துட்டோம். குடும்ப கார்டு எல்லாம் பொய்யி. புனர்வாழ்வும் பொய்யி. இங்க இருக்கிறவனெல்லாம் மனுசங்களே கெடையாது. திருட்டு ஏமாத்து, பொய்தான் வாழ்க்க... வாக்குவாதம் செஞ்சா.. வெட்டு, கொத்து, கொல.. எல்லாருமே கொடுரமானவங்க.. கையில் மடியில் கொண்டு வந்த பண மெல்லாம் மண்டவம் கேம்போடு முடிஞ்சி போச்சி...இப்போ இந்தியா கவுருமென்டு குடுக்கிற ரேசன் சாமான்களை வாங்கித்தான் வயிறு கழுவுறோம்.'[4] என்ற தங்க வேலு வின் கடிதக் குறிப்புக்களானது இந்தியாவிற்கு புலம்பெயர்ந்தவர்களுடைய துயரவாழ்வின் சாட்சியமாக அமைகின்றன.

மேலும், பிறந்து, வளர்ந்து தாமே வளப்படுத்திய மண்ணின் மீதான பிணைப்பினை அறுத்தெறிய மனமில்லாத ஒருசாரார் இந்தியப் பிரஜை அந்தஸ்த்து கிடைத்தும் தனது குடும்பத்தினர் யாவரும் இந்தியா சென்ற பின்னரும் புலம்பெயராது தனித்து நின்று அல்லலுற்றனர். எடுத்துக்காட்டாக ''நான் பிறந்தது இந்த மண்ணுங்க: ஓடி ஆடி பெரியவனானதும் எல்லாமே இந்த மண்ணுங்க. நானுங்க இந்த மண்ணிலே பிறந்து, இந்த மண்ணையே இந்த இரண்டு கையாலேயே வளப்படுத்தி இருக்கேணுங்க... நான் நட்ட மரங்களைப் பார்க்கிற போது, நான் கான்வெட்டி, முள்ளுப்போட்டு, வளம்படுத்தின நிலத்தில செழித்து, தளிர்த்து நிக்கிற தேயிலை செடிகளைப் பார்க்கிற போது என்ர புள்ளையளை பார்க்கிறமாதிரி இருக்குதுங்க..'' என்ற அம்மாசி என்ற தனிமனிதனின் வெளிப்பாடு புலம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்ட ஒட்டுமொத்த மலையகத் தமிழரதும் ஆத்மார்த்த உணர்வாக ஒலிப்பதைக் காணலாம்.

இவ்வாறு இந்தியப் பிரஜை அந்தஸ்தைப் பெற்றவர்கள் இலங்கையை விட்டு புலம்பெயர மனமற்றவர்களாகவும் சட்டச் செயற்பாடுகளின் நிர்ப்பந்தத்தால் நாடுகடத்தப்படும் போது தாங்கொணாத் துன்பச்சுமையுடன் வெற்றுடம்புகளாக புலம்பெயர்வதையும் மண்ணின் மீது தீராக்காதல் கொண்டவர்கள் புலம்பெயராது பிறந்த மண்ணிலேயே மண்ணோடு மண்ணாகியதையும் பல கதைகள் நுணுக்கமாகப் பதிவுசெய்துள்ளன.

### 6. பிறந்த மண்ணையும் சொந்த உறவுகளையும் பிரிந்து செல்லல்

பெருந்தோட்டத் தொழில்துறை சமூகத்தினரின் தவிப்புக்களையும் ஏக்கங்களையும் கருத்தில் கொள்ளாது அவர்களின் உணர்வுகளை வெறும் இயந்திரங்களாக மதிப்பிட்ட சிறீமா—சாஸ்திரி ஒப்பந்தம், பிறந்து வளர்ந்து வாழ்ந்து பழகிய மண்ணை விட்டும் உறவுகளை விட்டும் பிரிந்து செல்லவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அவர்களை உள்ளாக்கியது.

''இனி ஒரு காலத்தில் இந்த மலையில் ... இப்படி வந்து உட்கார்ந்து ... இவ்வளவு அழகு கொட்டும் பூமியைப் பார்க்க முடியுமா..? அவன் கண்கள் தூரத்துப் பார்வையிலிருந்து அருகில் இருக்கும் மலைத் தொடர்கள்வரை நோட்டமிடுகின்றன.. உயர்ந்த காடு.. ஏகாந்தமான சூழல்.. பறவைகள், வண்டுகள், பூச்சிகளின் குரலோசைகள்... காற்றினால் உரசித் தழுவிக்கொள்கின்ற மரங்களின் இன்ப முணகல்கள்.. குளிர் வாடையாய், தென்றலாய் அவனைத் தழுவுகின்ற பாசக் காற்று இன்னும் எத்தனை மாதங்களுக்கு உறவாடும்..? அவனுக்கு இலங்கை மண்ணை விட்டு இந்தியாவுக்குப் போகவே விருப்பமில்லை..''[4] சுக்குரு என்ற பாத்திரத்தின் இவ் ஏக்கமும் தவிப்பும் தான் பிறந்து வளர்ந்த சூழலில் தனக்கிருந்த ஈடுபாட்டையும் அதனுடனான நெருக்கத்தையும் காட்டுகிறது.

"சுந்தரம்..! ஒரம் போட்டு முடிச்சதும் ரெண்டு பேரும் டவுனுக்குப் போய் ஒரு போட்டோ புடிச்சுக்குவோம்! இனிமே எந்த காலம் நீயும் நானும் இப்படி இருக்கப் போறம்..? என்று சுப்பிரமணி சொன்னான். அவனது கைகளை இறுகப் பிடித்துக் கொண்ட சுந்தரம்.. 'டேய்.. நீ போனப் பொறகு ஒன்னைய பாக்குறதுக்கு கட்டாயம் வருவேன். கவலப் படாத..! போட்டோ செலவு நான்தான் குடுப்பேன்..' என்றான்"[4] இரு நண்பர்களுக்கிடையிலான சிநேகத்தையும் அவர்களுக்கிடையே இடம்பெறப் போகிற பிரிவின் வலியையும் இங்கு காணக்கூடியதாக உள்ளது. "ஐயோ! போறீயலே இனி எங்கே காணப்போறம்? கடைசியா ஒங்கலை எல்லாம் ஒருக்கா நல்லாப் பார்க்கனும் போல இருக்கு.."[7] போன்ற உணர்ச்சிக் கொந்தளிப்புகள்

பிரிந்து செல்பவர்களுக்கு இடையிலான நெருக்கத்தையும் பிரிவினது நீட்சியையும் உணர்த்துகிறது. இவ்வாறு நண்பர்கள், உறவினர்கள் மாத்திரமன்றி எத்தனையோ காதலர்களும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியும் நிலையும் நிலவியது என்பதை மு. சிவலிங்கத்தின் மதுரகீதம் பதிவுசெய்கிறது. சீனி, மாரி எனும் இரு காதலர்களது அன்பின் நெருக்கத்தையும் அக்காதலை சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தம் சிதைத்த முறைமையையும் அக்கதை காட்சிப் படுத்துகிறது.

மேலும், இந்தியப் பிரஜை அந்தஸ்தைப் பெற்றவர்கள் இந்தியாவிற்கு புலம்பெயரும் போது மலையகத்திலிருந்து அம்மக்களை சுமந்து வந்த ரயில் ''ஒப்பாரிக் கோச்சி, "அழுகைக் கோச்சி' என்ற அடையாளத்தைப் பெற்றமை அவர்களது பிரிவுத் துயரின் கொடூர சின்னமாக விளங்கு கிறது. 'தலைமன்னார் கோச்சி பதுளையில் காலை ஆறு மணிக்குப் புறப்படும். இந்தக் கோச்சிக்கு ''ஒப்பாரிக் கோச்சி'' என்ற பட்டப்பெயர் சூட்டியிருந்தார்கள்..! தலை மன்னார் கோச்சி, தலவாக்கொல்லை ஸ்டேஷனுக்கு வந்ததும், எல்லோரும் குய்யோ... முறையோ... என்று ஓலமிட்டுக் கதறினார்கள். மரண வீட்டு ஒப்பாரி வைத்து அழுதார்கள். கோச்சி வண்டிக்குள் ஏறியவர்கள். கரங்க ளை நீட்டி கீழே நிற்பவர்களைப் பிடித்துக் கொண்டு அலறும் அந்த துயரக் காட்சி உயிரையும், ஆத்மாவையும் பிடுங்கியது... ஒப்பாரி சத்தத்தோடு கோச்சி புறப்பட்டது. கோச்சி ஓடத்தொடங்கியதும், பல இளைஞர்கள், தங்கள் உறவுகளைப் பிரிய முடியாமல், கைகளை அசைத்துக் கொண்டு, சிறிது தூரம் கோச்சியின் அருகிலேயே ஓடினார்கள்'' [2]

## 7. இந்தியப் புலப்பெயர்வு தந்த துன்பங்கள்

தாயகம் வாழ வைக்கும் என்ற குருட்டு நம்பிக்கை யோடு நிர்ப்பந்தங்களின் காரணமாக தாம் பிறந்த மண்ணைவிட்டும் தன்னைச் சூழ்ந்திருந்த உறவுகளின் அரவணைப்பை விட்டும் இந்தியாவிற்கு புலம்பெயர்ந்த மலையகத் தமிழர்கள் அங்கும் சொல்லொணாத் துன்பங் களை அனுபவித்தனர். குறிப்பாக முதற்கட்டங்களில் இந் தியா சென்றவர்களின் ஏக்கத் தவிப்புக்களும் கொடூர துன்பங்களும் இந்திய அரசின் போலித்தனங்களும் அடுத்த கட்டத்தில் இந்தியா செல்லவிருந்தவர்களுக்கு பெரும் மனத்தடையை ஏற்படுத்தியது எனலாம். 'தம்பி இந்தியாவுக்கு வர்ற ஆசையவுட்டுப்புடு..! நாங்க ஏமாந் துட்டோம்' என்ற தங்கவேலுவின் கடிதக் குறிப்பு புலம் பெயர்வு தந்த அவலத்தின் சாரமாகும். குறிப்பாக அகதி வாழ்வு, வதிவிடப்பிரச்சினை, தொழிலற்ற நிலைமை, காலநிலை மாற்றம் தந்த சுமை, தமது பூர்வீக சொத்துப் பறிப்பு, உறவினர்களுக்கிடையே விரிசல், இந்திய அதிகாரி களினது அலட்சியமும் அதிகார துஸ்பிரயோகமும், சிறை வாழ்வு எனப் பல்வேறு துன்பங்கள் அவர்களை தொடர்ந்து அழுத்தின.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் குடியேற்றவாத செயற் பாடுகளால் இலங்கையில் இந்தியத் தமிழனாக அடை யாளங் காணப்பட்டவர்கள் பின்னர் உடன்படிக்கை மற்றும் ஒப்பந்தங்களின் நிமித்தம் இந்தியப் பிரஜைகள் அந்தஸ்தைப் பெற்று அங்கு சென்றதும் அங்கு சிலோன்காரனாகவும் கண்டிக்காரனாகவும் அடையாளங்காணப்பட்டனர். சட்டம் அவர்களுக்கு பிரஜைகள் அந்தஸ்தை வழங்கினாலும் இரு நாட்டு சமூகத்தினரும் அத்தொழிலாளர் குழுமத் தினரை தள்ளிவைத்தே செயற்பட்டமை அவர்களுக்கு உளநிலையில் பல்வேறு பிரச்சினைகளைத் தோற்று வித்தன எனலாம். ''கண்டியிலே நான் இந்தியக் காரன். இந்தியாவிலே நான் கண்டிக்காரன் அப்ப நான் எந்த நாட்டுக்காரன்டா..?'' [6] என்ற சூசையின் கேள்வி அநாதைகளாக்கப்பட்ட மலையகத் தொழிலாளர்கள் அனைவரிடத்தும் எழும் அநாதரவான கேள்வியாகும். இவ்வாறு அவர்கள் நாடற்றவர்களாக அடையாளப் படுத்தப்பட்டு புறந்தள்ளப்பட்டாலும் அவர்களது ஆழ்மன மானது தமக்குரிய தேசமாக இலங்கையின் மலையகப் பிராந்தியத்தையே வரித்துக்கொண்டதோடு அப்பிராந் தியத்துடன் ஆத்மார்த்தமான உறவினைப் பேணவும் தவியாய் தவித்தது. ''இதுதானே என் பூமி... இங்கே தானே என் வயதில் முக்கால்வாசி போயிற்று... என் உழைப்பும் இங்கேதான்... இந்த மலையில்தான் வாழ்ந்தேன்... இந்த வெய்யிலில் தான் காய்ந்தேன். இந்தக் காற்றைத்தானே சுவாசித்தேன்... இதுதானே என்பூமி-இதுதானே என் நாடு.." [5] என்ற கூற்று புலம் பெயர்ந்து சென்ற மலையகத் தொழிலாளர்களின் ஆழ்மன வெளிப்பாடெனலாம்.

இலங்கையின் மத்திய பிரதேசம் நல்ல நீர்வளமும் குளிர்மையான காலநிலையையும் கொண்ட ஈரவலயப் பிரதேசமாகும். ஆனால், இங்கிருந்து புலம்பெயர்ந்து சென்றவர்கள் தமிழ்நாட்டில் நீர்வளமற்ற வரண்ட பிரதேசங்களிலும் வாழ நேர்ந்தமையானது அவர்களது இயல்பான வாழ்வோட்டத்தைப் பெரிதும் பாதித்தது எனலாம். குறிப்பாக வானம் கறுத்தா மழை பெய்யும் தண் ணிக்கு கஷ்டமே இல்லாத நாட்டிலிருந்து 'ஆந்திராவில் - சென்னையில் - சிலோனில் புயல் அடிக்க வேண்டும் மழை பெய்ய..' என்ற நிலைமைகொண்ட தமிழ்நாட்டு

வாழ்வானது அம்மக்களைப் பெரிதும் பாதித்தது. இதனை அவர்களின் தேசம் என்ற கதையில் வரும் கண்ணுசாமி என்ற பாத்திரத்தின் மூலம் நன்கு உணர்ந்துகொள்ள முடிகிறது. அதாவது கண்ணுசாமி மலையகத்தை எண்ணி எண்ணி ஏக்கங்கொள்வதும் தண்ணீருக்காக தவம் கிடப்பதும் மழை பெய்யும் போது தன்னை அறியாமல் ஆடிக்களிப்பதும் ஈற்றில் மழையில் நனைந்தவாறே உயிர்துறப்பதும் காலநிலை வேறுபாட்டால் இயல்பு வாழ்க்கை எவ்வாறு பாதிப்படைந்தது என்பதைக் காட்டு கிறது. அத்தோடு இக்கதையில் வரும் கறுப்பனின் ''படுத்து எந்திரிச்சா ஆடுமாடோட மாரடிக்கனும்... கெணத்தோட லோல்படனும்... வானத்தோட சண்டை போடனும்... இதுபோதாதுன்னு மனுசங்களோட சண்ட போட வேண்டியிருக்கு... தொட்டுக்கக் கூடாத சாதியாம்... என்ன பொழைப்பு?...''[5] என்ற கூற்றானது நீர்த்தட்டுப்பாட்டின் அவலத்தை விபரிப்பதோடு அங்கு நிலவிய சாதியத்தின் கொடுமையையும் உணர்த்துகிறது.

மலையகத்தைப் பொறுத்தவரை அங்கு சாதியம், தீண்டாமையின் தாக்கம் இந்தியச் சூழலை விட மிகக் குறைந்தளவிலேயே செல்வாக்குச் செலுத்துகிறது. இங்கிருந்து புலம்பெயர்ந்து இந்தியா சென்றவர்களுக்கு அச்சமூக படிநிலையமைப்பு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தியது. ''தோட்டத்தில் எல்லாரும் தான் இருப்போம். இங்க மாதிரி சாதிக்கு ஒரு ரோடு - இந்த தெருவுல இந்த சாதிதான் இருக்கணும்கிறது இல்ல. நான் இருந்த லயத்தில ஒரு பக்கம் செட்டியார் - இன்னொரு பக்கம் கவுண்டரு — கடைசியா புள்ளமாருக. இப்படி எல்லோரும் இருந்தாங்க... யாரும் இங்க மாதிரி சாதிய பத்தி பேசுரது இல்ல''[5] என்ற கறுப்பனின் கூற்று மலையகத்தில் சாதியத்தின் தளர்ந்த நிலையையும் தமிழ்நாட்டில் அதன் கொடுமையையும் வெளிப்படுத்துகிறது.

புலம்பெயர்ந்து சென்றவர்களில் பெரும்பாலானோர் தம்மோடு கொண்டு சென்றதெல்லாம் 'கொஞ்சம் தேயிலைத் தூள், கொஞ்சம் கிராம்பு, சில சந்தன சோப்புக்கள், சில நூறு ரூபாய், நிறைய முதுமை'[6] என்பவையே. இதனால் அங்கு சென்றவர்களின் வாழ்வாதாரமானது மிகவும் துன்பகரமானதாகக் காணப்பட்டது. நல்ல தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. தமது பூர்வீக சொத்துக்களில் பங்கினைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக இந்திய உறவினர்கள் அவர்களை வெறுக்கத்தொடங்கினர்: திரும்பிவந்தமைக்காக வருந்தத் தொடங்கினர். எடுத்துக்காட்டாக, 'கண்டிகார பயலுக வந்திட்டானுங்க பங்கு பிரிக்க...! சிங்களவனுங்க அடிச்சி கொல்லலியே...!'[5] இந்நிலையில் இந்திய அரசு வழங்கும் சலுகைகளை நம்பியே தமது வாழ்வினை கடத்தவேண்டியதாயிற்று. ஆனால், அதிகாரிகளோ சட்டப்படி அகதிகளுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகளைக் கூடக் கொடுக்காது அவர்களை அலைக்கழித்தனர். இதனை புன்னைவனராசனின் "அவர்கள் அகதிகள்" என்ற கதை பதிவுசெய்கிறது. அத்தோடு இவரது மற்றொரு கதையான "இக்கரை நியாயம்", இலங்கைப் பிரஜை அந்தஸ்தை இழந்து இந்தியாவிற்குள் தன் தந்தையுடன் நுழைந்த கதிர்காமநாதன் என்ற இளைஞன் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டதைக் காட்டுகிறது. இவ்வாறு இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்ற மலையகத் தமிழர்கள் அனுபவித்த சொல்லொணாத் துயரங்களை பல சிறுகதைகள் தத்ரூபமாகப் பதிவு செய்துள்ளதைக் காணலாம்.

**8. தொழிலற்ற நிலைமை**

இலங்கையின் பிரஜை அந்தஸ்தை இழந்த இந் திய வம்சாவளி மலையகத் தமிழருக்கு நாட்டில் அரச தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளவோ சுயமாக தொழிலினை மேற்கொள்ள நிலத்தையோ வேறு எந்த உடைமைகளையோ சட்டபூர்வமாகப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை தோன்றியது. அத்தோடு பின்னர் வழங்கப்பட்ட பதிவுப்பிரஜை என்ற அந்தஸ்த்தும் அவர்களுக்கு தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள பாரிய தடைகளையே ஏற்படுத்தியது. அக்காலத்தில் கல்வியறிவில் கீழ் மட்டத்திலும் பாதுகாப்பற்ற இருப்பிடத்திலும் வாழ்ந்த மலையகச் சமூகத்தினர் தமது பதிவு ஆவணமாகத் தரப்பட்ட ஏட்டுப்பிரதியை தொடர்ந்து பேணிப் பாதுகாப்பதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டனர். இதற்கு சிறந்த உதாரணமாக பேரினவாதிகளால் மலையகத் தோட்டப்புறங்களில் மேற்கொள்ளப்பட்ட பல வன்செயல்களின் போது அம்மக்களின் பதிவு ஆவணங்கள் எரிக்கப்பட்டதைக் கூறலாம். '''பேர்த் சர்டிபிக்கெட் இருக்கா..?' அதிகாரி கேட்டார். ஒரு எழவும் கெடையாது..! எல்லாம் என்ன ஆனது...? 'ஒங்க ஆளுங்க எரிச்சுப்புட்டாங்க!'... 1958ல்ல சிறீ கொழப்பம் செஞ்சாங்க... வன்செயல் நடத்தினாங்க... எங்க குடும்பங்கள ஆமிகாரன்களும் கிராமத்துக் காடையன்களும் வெட்டி, கொத்தி, சுட்டு பொசுக்கினாங்க... அந்த சொடலையோடதான் எங்க காயிதம் எல்லாம் எரிஞ்சி போச்சி!" [3] கணபதி என்ற பாத்திரத்தின் நெஞ்சுக்குள் கனக்கும் அத்துன்ப சரித் திரத்தின் உணர்ச்சி வெளிப்பாடு அக்கொடுமைத் துயரினை

வெளிப்படுத்துகிறது. அத்தோடு அறியாமையில் மூழ்க்கிக் கிடந்த மலையகச் சமூகத்தினருக்கு தமக்கு பதிவு ஆவணமாகத் தரப்பட்ட ஏட்டுப்பிரதியை பாதுகாப்பதென்பது பெரும் சுமையாகியது. குறிப்பாக மு. சிவலிங்கத்தின் பேப்பர் பிரஜை என்ற கதையானது பத்திரத்தில் பிரஜை அந்தஸ்தை வழங்கியதால் அதனைப் பாதுகாக்க முடியாமல் போன ஒரு குடும்பத்தின் அவலத்தைப் பேசுகிறது. அதாவது சுப்பையா என்ற தொழிலாளியின் மகன் தனக்கு துறைமுகத்தில் கிடைத்த வேலையை பெற்றுக்கொள்ள பல கனவுகளோடு சென்று, அங்கு தனது பதிவினை உறுதிப்படுத்தும் பிரதி எலி கடித்துச் சிதைந்திருந்ததால் வேலைகிடைக்காது திரும்பும் சோகத்தை குத்தல் கலந்த கேலியுடன் வெளிப்படுத்துகிறது. இப்பதிவுப் பிரஜை அந்தஸ்தின் அவலத்தை அவ்விளைஞன் மூலம் பின்வருமாறு எள்ளி நகையாடுகிறார் ஆசிரியர் ''ஏன் நான் மாத்திரம் இந்நாட்டின் ஏனையப் பிரஜைகளைப் போல இல்லை...? எனக்கு மாத்திரம் ஏன் பத்திரத்தை வழங்கி பிரஜையாக்கியுள்ளார்கள்? எனக்கு மாத்திரம் ஏன் பேப்பரை கொடுத்துள்ளார்கள்? நான் ஒரு பேப்பர் பிரஜை...! பதிவு பிரஜை...! இந்த பிரபஞ்சத்திலே ''கடதாசி பிரஜைகள்'' ''பதிவு பிரஜைகள்'' என்று மகுடம் சூட்டப்பட்டு அவமானப்பட்டுக் கொண்டிருப்பவர்கள்தான் என் பரம்பரை...! என் பத்திரத்தை எலி கடித்துவிட்டது.. நான் ஒரு எலி கடித்த பிரஜை! என் பிரஜாவுரிமை பத்திரம் நனைந்து விட்டால்... நான் இந்த நாட்டின் நனைந்த பிரஜை... என் பத்திரம் கிழிந்து விட்டால் ... நான் ஒரு கிழிந்த பிரஜை... என் பத்திரம் எரிந்து விட்டால்... நான் ஒரு எரிந்த பிரஜை...''[2]

இவ்வாறு அரச தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியாத அவலநிலை தொடர்ந்ததோடு தமக்கென்று நிலமொன்றைக்கூட வாங்கமுடியாது குத்தகைக்கே நிலம் வாங்கி விவசாயம் செய்ய வேண்டிய துயரநிலை ஏற்பட்டதை குத்தகை என்ற கதை உணர்த்துகிறது. இவ்வாறு தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியாத அவல நிலையினையும் சுயதொழிலில் ஈடுபடமுடியாத சூழலையும் மலையக மக்களிடத்து இச்சட்டம் திணித்தமை அவர்களது முழு வாழ்வாதாரத்தையும் பாதிப்பதாகவும் அச்சமுதாய வளர்ச்சியினை மட்டுப்படுத்துவதாகவும் அமைந்தது எனலாம்.

## 06. அதிகாரிகளின் அலட்சியமும் அதிகார துஸ்பிரயோகமும்

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கூலிகளாக தமிழர்கள் அழைத்துவரப்பட்ட காலத்திலிருந்து அவர்களை அலட்சியமாக அதிகாரிகள் நடத்தியதோடு அவர்கள் இங்கிருந்து இந்தியா சென்ற பின்னர் இந்திய அதிகாரிகளும் அவர்களை அலட்சியமாகவே நடத்தியதை பல கதைகள் பதிவுசெய்துள்ளன. குறிப்பாக இலங்கையில் வாழ்ந்த ஆரம்ப காலங்களில் மலையகத் தமிழர்கள் வெறும் கூலியாகவே இருந்ததால் அவர்களது கல்வியறிவு மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே காணப்பட்டது. இதனால் அவர்களை நிர்வகிக்கும் அதிகாரங்களை பிரித்தானியர்கள் யாழ்ப்பாணத் தமிழரிடம் ஒப்படைத்திருந்தனர். ஆனால், அவர்களும் மிகக் கடுமையாகவே இவர்களிடத்தில் நடந்துகொண்டனர் என்பதை காளிமுத்துவின் பிரஜாவுரிமை என்ற கதையில் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக "ஐயா எனக்கு ஒரு குழந்தை பிறந்திருக்கு. கருப்பையா என்று பெயர் வைச்சிருக்கோம்: எழுதிக் கொள்ளுங்கோ, எஜமான்' என்று தோட்ட சூப்ரண்டன் கந்தோரில் போய் ஆசையோடு சொல்லும்போதே, அங்கிருக்கும் யாழ்ப்பாணத்து கிளார்க் துரை 'என்னடா அது கருப்பு ஐயா? எப்போடா ஐயாவானே? சின்னக்காளிமுத்து என்று சொல்லடா' என்று அதட்டி 'சி. கா.' மட்டும் போட்டு விஷயத்தை முடித்துவிடுவான்"[3] என்ற சித்திரிப்பு அவர்களது அலட்சியத்திற்கும் அதிகாரத் துஸ்பிரயோகத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறே அவர்கள் பிரஜா உரிமைக்கு விண்ணப்பித்த பிறகு இடம்பெற்ற விசாரணைகளை நடத்தியவர்கள் அம்மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது விண்ணப்பங்களை நிராகரிக்கவெனவே விசாரணைகளை மேற்கொள்ளும் நோக்கில் விசாரணைகளை மேற்கொண்டதோடு கச்சேரியில் உள்ள சாதாரண ஊழியன் முதல் அனைத்து அதிகாரிகளுக்கும் லஞ்சம் கொடுத்தால்தான் ஒவ்வொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்ற நிலையும் காணப்பட்டது. இலங்கையில்தான் இந்நிலை என்றால் இந்தியா சென்றவர்களின் நிலைமையும் இவ்வாறே தொடர்ந்தது. அவர்கள் அகதிகள் கதையில் வரும் சூசை அகதிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகளைப் பெற்றுக்கொள்ள கூட ஆறு மாதகாலமாக அலைந்தும் அச்சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் தவிப்பதைக் காணலாம்.

## 9. மலையகத் தமிழரது தொழிற்சங்கங்களினதும் அரசியல் தலைமைத்துவங்களினதும் பொறுப்பற்ற தன்மை

மலையகத் தமிழரில் பெருந்தொகையினர் நாடற்ற அகதியாகியதற்கும் அவர்கள் பிறந்து வளர்ந்த மண்ணையும் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்த

உறவுகளைப் பிரிந்ததற்கும், தொழிலற்று நிர்க்கதியான தற்கும் வாழவழியற்று மடிந்துபோனதற்கும் இற்றை வரை வளமான வாழ்விழந்து துன்பசாகரத்திற்குள் மூழ்கிக்கிடப்பதற்கும் சாதாரண பியூன் முதல் அதிகாரிகள், அரசியல் வாதிகள் வரை அம்மக்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்காது அலட்சியமாக தாம் போன போக்கில் எடுத்த முடிவுகளும் ஒரு முக்கிய காரணமாக அமைகின்றன.

இந்நிலைமைக்கு அவர்களது அரசியல் தலைமைத் துவங்களினதும் தொழிற்சங்கங்களினதும் பொறுப் பற்ற தன்மையும் ஒரு முக்கிய காரணம் என்று கூறு வாரும் உளர். குறிப்பாக "வழிகாட்டத் தவறிய தலை மைகளினால் வாழ்க்கையைத் தொலைத்து விட்டு இன்னும் தேடிக்கொண்டிருப்பவர்களில் அவனும் ஒரு திசை தெரியாதவன்" [3] என்ற சித்திரிப்பு மலையகத் தமிழரின் இவ் அவலநிலைமைக்கு அவர்களது தலை மைத்துவங்களின் பொறுப்பற்றத் தன்மையே முக்கிய காரணமெனச் சாடுவதைக் காணலாம்.

## 10. முடிவுரை

மேற்கூறியவற்றை தொகுத்துநோக்கின் பிரஜா உரிமைப்பறிப்பு மற்றும் அதன் உடன் நிகழ்வுகளால் விளைந்த தனிமனித, குடும்ப அவலங்களைச் சித்தி ரிப்பதன் மூலம் அச்சிறுகதைகள் பதிவுசெய்யும் மலையகத் தமிழ்ச் சமூகம் அனுபவித்த அவலங்களை பின்வருமாறு வரையறுக்கலாம்:

1. நாடற்ற அகதியாகியோர் இலங்கையிலோ இந்தியா விலோ பிரஜைகள் அந்தஸ்தைப் பெற முயற்சித்தல்
2. பிற்பட்ட காலத்தில் இலங்கைப் பிரஜைகள் அந்தஸ்தை மாத்திரம் பெற்றுக்கொள்ள போராடுதல்
3. இந்தியப் பிரஜைகள் அந்தஸ்தைப் பெற்றவர்கள் இலங்கையைவிட்டு புலம்பெயர மனமற்றிருத்தல்
4. பிறந்த மண்ணையும் உறவுகளையும் பிரிந்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தம்
5. இந்தியப் புலப்பெயர்வு தந்த துன்பங்கள் (அகதி வாழ்வு, வதிவிடப்பிரச்சினை, தொழிலற்ற நிலைமை, காலநிலை மாற்றம் தந்த சுமை, தமது பூர்வீக சொத் துப் பறிப்பு, உறவினர்களுக்கிடையே விரிசல், சிறை வாழ்வு, இந்திய அதிகாரிகளின் அலட்சியமும் அதிகார துஸ்பிரயோகமும்)
6. தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியாமை
7. நிலம் மற்றும் உடைமைகளை சொந்தமாகப் பெற முடியாமை
8. சிங்களப் பேரினவாதிகளின் மலையகத் தமிழர் மீதான வன்முறைகள்
9. அதிகாரிகளின் அலட்சியமும் அதிகார துஸ்பிர யோகமும்
10. தொழிற்சங்கங்களினதும் அரசியல் தலைமைகளி னதும் பொறுப்பற்ற போக்கு

வாசக மனத்திற்குள் பலமுனைகளிலும் நெருடல்களை ஏற்படுத்துவதாக அமைந்துள்ள இக்கதைகள் யாவும் நாடிழந்த வாழ்க்கையின் ஊசலாட்டத்தையும் மனத் துயரங்களையும் உணர்வுத் தளத்தில் நின்று யதார்த்த பூர்வமாக வெளிப்படுத்தியுள்ளன. அக்கதைகள் கலை யியல் நேர்த்தியில் சிற்சில குறைபாடுகளைக் கொண் டுள்ள போதும் பிரஜாஉரிமைப் பறிப்பு மற்றும் அதன் உடன்விளைவான செயற்பாடுகள் பன்முகப்பட்ட அகவெளி களைக் கொண்டுள்ள தனிமனிதர்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய அவலங்களையும் அதிர்வுகளையும் பதிவு செய்வதன் மூலம் ஒட்டுமொத்த இந்தியவம்சாவளி மலை யகத் தமிழரினதும் அக மற்றும் புற வெளியில் நிகழ்ந்த அவலங்களையும் அதிர்வுகளையும் பதிவு செய்வதில் முழுமைப் பெற்றவையாகவே விளங்குகின்றன.

## உசாத்துணை நூற்பட்டியல்


[1] குணராசா, க. (தொ.ஆ) "முற்போக்குக் கால கட்டத்துச் சிறுகதைகள்", பூபாலசிங்கம் பதிப்பகம், 2010.

[2] சிவலிங்கம், மு. "மலைகளின் மக்கள்", இள வழகன் பதிப்பகம், 1992.

[3] சிவலிங்கம், மு. "ஒரு விதை நெல்", மணி மேகலைப் பிரசுரம், 2005.

[4] சிவலிங்கம், மு. "ஒப்பாரிக்கோச்சி", நாவல் நகர் தமிழ்ச்சங்க வெளியீடு, 2010.

[5] சோமு, மாத்தளை. "அவர்களின் தேசம்", குறிஞ்சி வெளியீடு, 1995.

[6] புன்னைவனராசன், சுப. "போராளி", சந்தியா பதிப்பகம், 2006.

[7] மொழிவரதன், "மேகமலையின் ராகங்கள்", மலையக வெளியீட்டகம், 1988.

[8] "உழைக்கப் பிறந்தவர்கள்", துரைவி வெளியீடு, 1997.